**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

பொதுப் பணிகள் - ஜூலை 2003-ல் நடைபெற்ற அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் - வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட நாட்களான 10.4.2003 மற்றும் 1.7.2003 / 2.7.2003 முதல் 4.7.2003 வரையான காலத்தைப் பணிக் காலமாக முறைப்படுத்துதல் - ஆணையிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (கே) துறை

அரசாணை நிலை எண்.73
நாள் : 23.6.2006.

படிக்கப்பட்டது :

1. அரசுக் கடித எண்.18654/கே/2003-1, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (கே) துறை, நாள் 8.4.2003.
2. அரசுக் கடித எண்.40282ஹ/கே/2003-5, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (கே) துறை, நாள் 13.1.2004.
3. அரசுக் கடித எண்.40282ஹ/கே/2003-7, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (கே) துறை, நாள் 21.10.2004.
4. அரசாணை நிலை எண்.58, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (கே) துறை, நாள் 17.5.2005.
5. அரசாணை நிலை எண்.90, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (கே) துறை, நாள் 18.7.2005.
6. தலைமைச் செயலகச் சங்கத் தலைவரின் கடித எண்.35/த.செ.ச./2006, நாள் 19.6.2006.

***

ஆணை :

மேலே படிக்கப்பட்ட 8.4.2003 நாளிட்ட அரசுக் கடிதத்தில், அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், 10.4.2003-ல் மேற்கொண்ட ஒரு

நாள் அடையாள வேலைநிறுத்தம், ஊதியம் இல்லா விடுப்பாக முறைப்படுத்தப்பட்டது.

2. மேலே படிக்கப்பட்ட 13.1.2004 நாளிட்ட அரசுக் கடிதத்தில், அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஜூலை 2003-ல் போராட்டத்தில் ஈடுபட்ட காலம் 1.7.2003 அல்லது 2.7.2003 முதல் 24.7.2003 வரை சம்பளம் இல்லா விடுப்பாகவும், 25.7.2003 முதல் பணியில் சேர்ந்த நாள் வரை தகுதியுள்ள விடுப்பாகவும், வரன்முறைப்படுத்தப்பட்டது.

3. மேலே படிக்கப்பட்ட 21.10.2004 நாளிட்ட அரசுக் கடிதத்தில், அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஜூலை 2003-ல் போராட்டத்தில் ஈடுபட்ட காலம் 1.7.2003 அல்லது 2.7.2003 முதல் 4.7.2003 வரை சம்பளம் இல்லா விடுப்பாகவும் 5.7.2003 முதல் 24.7.2003 வரை பணிக் காலமாகவும் வரன்முறைப்படுத்தப்பட்டது.

4. மேலே படிக்கப்பட்ட 17.5.2005 நாளிட்ட அரசாணையில், அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஜூலை 2003-ல், போராட்டத்தில் ஈடுபட்ட காலம் 1.7.2003 அல்லது 2.7.2003 முதல் 4.7.2003 வரை சம்பளம் இல்லா விடுப்பாகவும், 25.7.2003 முதல் மீண்டும் பணியில் சேர்ந்த நாள் வரை, பணிக் காலமாக வரன்முறைப்படுத்தப்பட்டது. இந்த ஆணை ஓய்வு பெற்ற நீதிபதிகள் குழுவின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, பணிநீக்கம் / பணியறவு செய்யப்பட்டு, 10.2.2004 முதல் மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்குப் பொருந்தாது என ஆணையிடப்பட்டது.

**2

5. மேலே படிக்கப்பட்ட 18.7.2005 நாளிட்ட அரசாணையில், ஓய்வு பெற்ற நீதிபதிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, பணிநீக்கம் / பணியறவு செய்யப்பட்டு, 10.2.2004 முதல் மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு, அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட காலம், 1.7.2003 அல்லது 2.7.2003 முதல் 4.7.2003 வரை சம்பளம் இல்லா விடுப்பாகவும், 25.7.2003 முதல் 10.2.2004 வரை, பணிக் காலமாகவும் வரன்முறைப்படுத்தப்பட்டது.

6. தலைமைச் செயலகச் சங்கம், ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொண்ட 10.4.2003 மற்றும் வேலைநிறுத்த நாட்களான 1.7.2003 முதல் 4.7.2003 வரை தலைமைச் செயலக ஊழியர்களுக்கும், 2.7.2003 முதல் 4.7.2003 வரை இதர அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் ஊதியம் இல்லா விடுப்பாக அறிவிக்கப்பட்ட காலத்தைப் பணிக் காலமாகக் கருதி ஆணைகள் வழங்குமாறு வேண்டியது.

7. மேற்கண்ட கோரிக்கையை அரசு பரிசீலித்து, ஏற்றுக்கொள்ள முடிவு செய்து, அவ்வாறே கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்படுகின்றன :-

(ஸ) அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட காலமான 10.4.2003 பணிக் காலமாக முறைப்படுத்தப்படுகிறது.
(ஸை) அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஜூலை 2003-ல் நடைபெற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட காலமான 1.7.2003 அல்லது 2.7.2003 முதல் 4.7.2003 வரையான காலம் பணிக் காலமாக முறைப்படுத்தப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எல்.கே. திரிபாதி,
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்துத் துறைச் செயலர்கள், தலைமைச் செயலகம், சென்னை-9.
அனைத்துச் செயலகத் துறைகள், சென்னை-9.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட நீதிபதிகள்.
சிறப்பு ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குகள் அலுவலகம், சென்னை-15.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம் / கிழக்கு / வடக்கு / தெற்கு / உயர்நீதி மன்றம் / கோயம்புத்தூர் / மதுரை.
மாநில கணக்காயர், சென்னை-18 / 9 / 35.

நகல் :-
தலைவர், தலைமைச் செயலகச் சங்கம், சென்னை-9.
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சங்கங்கள்.

/ ஆணைப்படி / அனுப்பப்படுகிறது /

(கோ. கணேசன்),
பிரிவு அலுவலர்.